# புனிதம்

## பாராட்டு மலர்



வெளியீடு : கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதம்

உ

**2019.08.28** இல்
கோட்டக் கல்விப் பணிப்பாளராக
பதவியுயர்வு பெற்ற
எமது பாடசாலையின் அதிபர்

## திரு. ஜெ. டேவிட்

அவர்களுக்கான

## பாராட்டு மலர்

வெளியீடு :

**கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இலச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வரம் தரும் எம் இறைவா வாழ்வு மலர
வரந்தா கோடி அருள் எம் இறைவா
பரம் பொருள் உந்தன் தாழ் மனப்பூக்கள்
அடியவர் நாம் ஒன்று சேர்நதோம்.

பாரதம் பயில்கின்ற பாண்டிருப்பில்
நாவலர் வித்தியாலயம் நமதே
காரிருள் கிழிந்தெழ கதிரவன் நாம்
கல்வி நலம் பொங்கிப் பூத்திட வரம் தாரும்.

அறிவுச் சுடர் எங்கள் வாழ்வினிலே
அன்போட நாம் பூமியிலே
பெறுமதி வாய்ந்துயர் நல்லொழுக்கம்
பேணிடும் மேலவர் ஆகிடவே.

அதிபர் அன்பு நல் ஆசிரியர்
அகங்களில் வாழ்ந்திடும் வாழ்வெனும்
கதி எமக்களித்திடும் எம் பெற்றோர்
சிறப்புகள் எய்திடவே களித்திட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISION & MISSION

## Motto

*'Live to Educate'*

## Our Vision

*Creating the compassionate children having everlasting obedience, virtues, personal traits, knowledge, ability and personality through developing qualified skills in students.*

## Our Mission

*By accommodating the basic competencies through morality child centered teaching and learning activity, build up the everlasting life's fan of a society students.*

## Objectives

*Raising the school physical resources*
*Developing student's education*
*Enrichment of students' morality and virtue*
*Developing the infrastructure of the school*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை தீபமே...

## இன்றைய கடமை நிறைவேற்று அதிபரின் முன்னுரை

பார் புகழும் பாண்டவர் பூமியாம் பாண்டிருப்பில் கிருஸ்ண பிள்ளையின் இளைய மகளான கிருஸ்ண குமாரியை கரம் பிடித்து பாண்டியூரின் எல்லைப் பாடசாலை நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக சுமார் எட்டு வருடமிருந்து சேவையை நிலைநாட்டி பாண்டிருப்பு எல்லையை விட்டு கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கண்ணகி புகழ்பாடும் சுவாமி விபுலானந்தரின் பூமியாம் காரைதீவு சென்றுள்ள ஜெயக்கொடி டேவிட் அதிபர் அவர்களுக்கு எனது நினைவலைகளிலிருந்து சில துளிகள்...

வருடமாம் இரண்டாயிரத்துப் பதினொன்றில் டேவிட் எனும் தமிழ் மணி நாவலருக்கு வருகின்றார்.இவர் கண்டிப்பானவர் என காதில் பலரின் ஓதல்கள் அவ்வேளையில் நான் சைவநெறியும் தமிழ் மொழியும் கற்பித்துக் கொண்டிருந்தேன். பலரின் பயமுறுத்தலுக்கு எதிர் மறையாய்த் திகழ்ந்தார் டேவிட் சேர்.

வன்னியசிங்கம் அதிபர் ஓய்வு பெற்றுச் செல்ல அதிபராக டேவிட் சேர் ஏற்றதும் தமிழிற்கு சோதிமலர் ஆசிரியர் வந்து கற்பித்தார்.பின்பு சில வருடங்களில் மாற்றலாகிச் சென்றதும் மீண்டும் தமிழ்மொழி கற்பிக்க என்னுடன் இரு ஆசிரியர்கள் பணிக்கப்பட்டோம். நாங்கள் எங்களால் முடியாது என்ற போது பயப்பட வேண்டாம் நானிருக் கிறேன் "யாமிருக்கப் பயமேன்" எனும் கூற்றைக் கூறிக் கொள்வார். தமிழில் ஏற்படும் சந்தேகங்கள், கற்பித்தலில் சிரமம் ஏற்பட்டால் உடன் விளக்கமளித்து வகுப்பில் வந்து கற்பித்தும் விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பாடசாலை எனக்குத் தந்துணிவையூட்டிய பாடசாலை நான் பல திறமையான அதிபர்களின் கீழ் கல்வி கற்றும் தொழில் செய்தும் இருந்தாலும் டேவிட் சேரிடம் பாடரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ சென்று கேட்ட போதெல்லாம் இன்முகத்துடன் அமரச் செய்து விடை பகர்வார். பாடசாலை வெளிவாரி மதிப்பீடு தொடர்பான பூரணமான விளக்கத்தை சேரிடம் இருந்து கற்றுக் கொண்டேன்.

டேவிட் சேர் அவர்கள் பாடசாலையின் வளாகத்தை கவின் நிலைக்குக் கொண்டு வர பெரு முயற்சி எடுத்தார். முகப்பிலே பெயர்ப்பலகை மாற்றம் செய்து அத்துடன் பூந்தோட்டம் அமைத்தும் கட்டிடமும் கட்டி ஆசிரியர்களை வகுப்பறைகள் முன்னே அலங்கரிக்கச் செய்தார்.மேலும் பாடசாலை வகுப்பறைச் சுவர்களில் பெரியார்களின் சுருக்க விளக்கம்.கட்டிடங்களில் வாசகங்கள் தொங்கவும் செய்வித்தார்.ஒன்று கூடல் மண்டபத்தை புதுப் பொலிவு பெறச் செய்ததுடன் எல்லா வகுப்பறை கட்டிடங்களது தரைப்பகுதி கூரைகள் யாவும் செப்பனிட்டார்.

வெளிப்புற அழகோடு இல்லாமல் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் நாடகம் பயிற்றுவித்து மேடையேறச் செய்து வெற்றி பெறச் செய்தார்.பல்வேறு சவால்களிற்கு மத்தியில் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த ஆசிரியர்களை ஊக்குவித்தார் இதனால் எமது மாணவச் செல்வங்கள் போட்டிகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் வெற்றி பெற்றனர். கோட்ட, வலய, மாவட்டம் ஏன் மாகாண, தேசிய போட்டிகளிலும் மாணவர்கள் சாதனைகள் படைத்தனர்.

மேலும் வெறும் வகுப்பறையாக இருந்த காரியாலயம் மெருகூட்டி சீர்செய்து அலங்கரிப்பதுடன்.வகுப்பறைகள் எல்லாம் மின்விசிறிகள் சுழலச் செய்யப்பட்டது.அழகியற் கல்வியில் சித்திரத்தோடு சங்கீதமும் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் சேரின் பேச்சில் பகமைத் தமிழ் தித்திக்க சிறந்த பேச்சாக இலக்கணத் தமிழ் கொண்டதாக உரையாற்றுவார்.மாணவர் கழுத்துப் பட்டிகளை அழகுற மாற்றி அமைத்தார்.மாணவர் தலைவர்களுக்கான சின்னங்கள் சூட்டி தலைமைத்துவம் வளர்த்தார்.இவை மட்டுமல்லாது மாணவர்களது ஒழுக்கத்தில் கண்ணும் கருத்துமாக மிகவும் கண்டிப்பாகச் செயற்பட்டு நல்லொழுக்க சீலர்களாக எம் மாணவர்களை வளர்த்தெடுத்தார். சிங்களம், ஆங்கிலம் புலமை கொண்டவர். துணிச்சல் மிக்கவர். எப்பேர்ப்பட்ட அதிகாரிகளையும் சமாளித்து பாடசாலையை முன்னேற்றும் வித்தையை கற்றவர்.

பாடசாலை வரலாற்றில் குறைந்த கிறிஸ்தவ ஆசிரியர்கள், மாணவர்கள் இருந்தும் ஒளிவிழாவை உருவாக்கி வெகு விமர்சை யாக கொண்டாடிய பெருமைக்குரியவர் ஜெயம் மிக்க ஜெயக்கொடி டேவிட் சேர் பதவியுயர்வு பெற்று எமது பாடசாலையை விட்டு மாற்றலாகிச் செல்வது ஒரு புறம் மகிழ்ச்சியாயினும் மேலும் பல பதவியுயர்வுகளும் புகழும் ஓங்கிக் குடும்பத்துடன் இன்புற்று வாழ பாடசாலைச் சமூகம் சார்பில் வாழ்த்துப் பூக்களை நவில்கின்றோம்.



**செல்வி. க.வசந்தி**
கடமை நிறைவேற்று அதிபர்,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.

**அறிவைப் பெறுவதற்கான முதற்படி
தம் அறிவீனத்தை உணர்வதுதான்.**

- ஷோக்கிரட்டீஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வாழ்த்து...



பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்ற திரு. ஜே. டேவிட் அவர்களை கௌரவித்து வெளிவிடப்படும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலை அதிபர் ஒரு பாடசாலையை சிறப்பாக நடாத்தி செல்வதில் பல்வேறு சவால்களை எதிர் கொண்டு வெற்றி காண வேண்டியதாக இருக்கும். அந்த வகையில்த்தான் அதிபராக சேவையாற்றிய காலப்பகுதியில் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தினை மிகவும் சிறப்பான முறையில் வழி நடாத்திச் சென்ற ஒருவராக அதிபர் டேவிட் அவர்களை குறிப்பிட முடியும். இப் பாடசாலையின் பல்வேறு வகையிலான அபிவிருத்திகளினதும் இவரது பங்களிப்பு பாராட்டப்பட வேண்டியதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தினை தான் பொறுப்பேற்ற காலப்பகுதியிலிருந்து அதன் வளர்ச்சிக்கு அதிபர் டேவிட் அவர்கள் ஆற்றிய பங்களிப்பினையும் அதன் விருத்திக்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சியினையும் சமூகம் என்றும் நினைவில் வைத்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சமூகத்தினரோடு நல்லுறவைப் பேணி பாடசாலையை சமூகமாக நடாத்திச் சென்ற அதிபர் அவர்களின் பணியினை பாராட்டுகின்றேன். திரு. ஜே. டேவிட் அதிபர் அவர்களின் சேவையினை நினைவு கூரும் வகையில் பாடசாலை சமூகம் பாராட்டு விழாவொன்றினை நடாத்துவதற்கு முன்வந்த விடயமும் பாராட்டப் பட வேண்டிய தொன்றாகும்.தொடர்ந்தும் அவர் மேற்கொள்ளுகின்ற பணிகள் சிறக்கவும் இப்பாடசாலையின் முன்னேற்றம் தொடர்ந்து ஏற்படவும் வாழ்த்துகின்றேன்.

**எம்.எஸ். அப்துல் ஜலீல்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிமனை,
கல்முனை.

> **காலத்தின் அருமை பெருமையை அறிந்து கொண்டு**
> **சுறுசுறுப்பாகச் செயற்படுபவரிடம்**
> **மரணம் கூட நிதானமாகத்தான் நெருங்கும்.**
> - பாக்ஸ்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகளைப் பின்பற்றி

பிரசித்தி பெற்ற கல்வியலாளரான மரியா மொண்டி சூரி அம்மையார் 'Education and peace' எனும் தமது நூலில் பின்வருமாறு கூறுகின்றார். மாணிக்கம் ஒளிர்வதற்குத் தடையாக இருக்கும் மூடுதிரையை நான் அகற்றி விடுவேன். அது மீண்டும் ஒளிரத் தொடங்கிவிடும். அதைப் பார்ப்போர் அனைவரும் இதை எப்படி இவ்வாறு ஒளிரச் செய்தீர்கள் முன்பு இப்படி பிரகாசிக்கவில்லையே என்று வினவுவார்கள். அப்போது நான் இதிலிருந்த மாசு நிறைந்த மூடு திரையை மட்டும் நான் அகற்றிவிட்டேன்.இந்த ஒளியும் பிரகாசமும் ஏற்கனவே அதில் இருந்ததுதான் என்று பதில் கூறுவேன் என்று எழுதியுள்ளார். மாணவர்களும் இவ்வாறாகவே உள்ளனர். குற்றம் களைபவர்கள், குறை நீக்குபவர்கள் மாசகற்றி ஒளிரச் செய்பவர்கள் ஆசிரியர்கள். அத்தகைய ஆசிரியக் குடும்பத்தை கட்டமைத்து மாணவச் செல்வங்களை செழுமைப் படுத்தும் உயரிய சீலர்களே அதிபர்களாவர். ஆளுமை, நன்னடத்தை, முகமலர்ச்சி, நட்புறவு, சகிப்பு, முன்மாதிரி, சக ஆசிரியர்களையும் மாணவர்களையும் மதித்தல், சுறுசுறுப்பு, வழிகாட்டியாக செயற்பட்டு தடைகளை தகர்த்து எதிர்கால நாட்டின் நற்பிரஜைகளை வடித்தெடுக்கும் சிற்பிகளே பாடசாலை அதிபர்களாவார்.

இத்தகைய தடங்களில் தம்மையும் இணைத்துக் கொண்டு கல்முனை கல்வி வலயத்தில் நாவலர் வித்தியாலயத்தை சுமார் எட்டு வருட காலமாக வளர்ச்சிப் பாதையில் நகர்த்தியவர் அதிபர் டேவிட் என்பதை நாமறிவோம். Type-2 வகையைச் சேர்ந்த



ஜெ. டேவிட் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலை கல்வியில் வளர்ச்சியையும் பாட இணைச் செயற்பாடுகளில் பல சாதனைகளையும் பெறுவதற்கு இவ் அதிபரின் சிறந்த தலைமைத்துவமும் வழிகாட்டலுமே காரணமாக அமைந்தன. இவரது சேவைக்காலத்தை இப்பாடசாலைச் சமூகம் மறந்து விட முடியாது. அதன் வெளிப்பாடாகவே சேவை நலன் பாராட்டு விழாவெடுக்கவும், நினைவு மலர் வெளியிடவும் முன் வந்துள்ளனர். இவை பாராட்ட வேண்டிய விடயங்களாகும்.

அயல் வலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக இவர் ஆற்றிய சிறந்த பணிகளை நாமறிவோம். செயற்திறனும் ஆளுமையும் கொண்ட இவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள நிலையில் நாவலர் வித்தியாலயம் அவரது சுவடுகளை பின் பற்றி கல்வியிலும் ஏனைய இணைச் செயற்பாடுகளிலும் நடக்க வேண்டும். அவரது வழிகாட்டல்களும் முகாமைத்துவப் பண்புகளும் தொடர்ந்தும் பின் பற்றப்பட வேண்டும் என கேட்பதுடன் முன்னாள் அதிபரும் இந்நாள் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான அதிபர் டேவிட் அவர்களை வாழ்த்துகின்றேன்.

**எஸ். புவனேந்திரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்),**
**வலயக் கல்விப் பணிமனை,**
**கல்முனை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள மகிழ்வுடன் வாழ்த்தும்...

கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் சேவையாற்றி காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற திரு J. டேவிட் அவர்களை சேவை நலன் பாராட்டு நிகழ்வின் போது வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் உளம் மகிழ்வுறுகின்றேன்.

சேற்றில் முளைத்த செந்தாமரை போன்று குப்பையில் கிடந்த குன்றிமணி போன்று சொறிக்கல்முனை கிராமத்தில் கௌரவமான கல்விப் குடும்பத்தில் பிறந்த திரு. J. டேவிட் அவர்கள் கல்வி கற்கும் காலம் தொடக்கம் இன்று வரை சிறந்த நண்பன்.

இவர் முயற்சி திருவினையாக்கும் என்பதற்கான உதாரண புருஷர்.ஏனெனில் பின் தங்கிய பிரதேசத்திலிருந்து கல்வியின் உச்சம் தொட்டவர்.இவர் உயிரியல் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்றவர்.இவரது முயற்சியால் கலைமாணி பட்டம்,முதுமாணிப் பட்டம்,பட்டப்பின் கல்வி டிப்ளோமா என்று கல்வியிலே உயர்வு பெற்றதன் வழியாக ஆசிரியர் பதவியில் இருந்து உயர்வு பெற்று சமூகத்தில் சிறப்பான இடம்பிடித்து மற்றவர்களுக்கு முன்மாதிரியான ஒருவராக திகழ்கின்றவர் என்பது யதார்த்தமான உண்மையாகும்.

இவர் சம்மாந்துறை கல்வி வலயத்தில் மிகக் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியராக அதிபராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய காலப்பகுதியில் மாணவர்களின் கல்வி உயர்விற்காக பொறுப்போடு கடினமாக உழைத்த உத்தமர்,இவர் அப்போது கல்விப் பணிப்பாளராலும்,கோட்டக்கல்விப் பணிப்பாளராலும் அதிபராலும் பெற்றோர்களாலும் போற்றி புகழும் அளவிற்கு தம் பணியை செவ்வனே நிறைவேற்றிய கல்வியாளர்.



ஜெ. டேவிட் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கல்வித்துறையில் மாத்திரம் நின்றுவிடாது சமூக சேவையாளனாகவும் எழுத்தாளராகவும் சமூகத்திற்கு தன்னை அர்ப்பணித்தவர்."பைந்தமிழ் குமரன்" எனும் புனைப் பெயரில் கலை இலக்கிய படைப்புகளை படைத்து சமூகத்திற்கு வழங்குகின்ற கலைஞரும் சிறந்த எழுத்தாளரும் நாடக ஆசிரியரும் ஆவார்.இவரது படைப்புக்கள் தேசிய ரீதியில் வெற்றி பெற்று விருதுகளை பெற்றமை குறிப்பிடத் தக்கது.

இவர் சிறந்த கல்விச் சேவைகளை சமூகச் சிற்பி என்பதற்கான எடுத்துக்காட்டாக தொடர்ச்சியாக பெற்று வந்த குரு பிரதீப பிரபா விருது மற்றும் சாஹித்திய விருது,பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டமை எடுத்துக்காட்டாகும்.இவருடைய கல்விப் பயணம் மென்மேலும் உயர்வடைந்து சிகரம் தொட வேண்டுமென்றும் கலை இலக்கிய படைப்புக்களை மென்மேலும் படைத்து சமூகத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்வதற்கு அவர் நீண்ட காலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றும் இறைவனை பிரார்த்தனை செய்து வாழ்த்தி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**எஸ். சரவணமுத்து**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்வி அலுவலக்,
கல்முனை (தமிழ் பிரிவு)

தடுமாறி வீழ்வது தவறில்லை
எழுந்திருக்க எண்ணாமல் இருப்பதுதான் தவறு.
- நேரு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயைப்போல...

தாயைப்போல அரவணைத்து
தந்தை போல தட்டிக்கொடுத்து
தாம் பெற்ற அனுபவக்கல்வியை மாணவர்களுக்கு கற்பித்து
பல மாணவ சிற்பங்களை செதுக்கி
இவர் என் மாணவன் என்று கர்வத்தோடு கூறும் தலைவர்.

நம்மை விட வளர்ந்து விட்டானே என்று
பொறாமைப்படாத ஒரே ஜீவன்
இன்று இவ் ஆசானின் வளர்ச்சி கண்டு
மனம் பூரிப்படைந்து வாயடைத்து நிற்கிறோம்.



உரிய இடத்தில் இருந்து உங்களுக்கு
கிடைத்துள்ள அந்தப் பெரிய கௌரவம்
உலகம் உள்ளளவும் உங்கள் பெயரை
உரைத்துக் கொண்டிருக்கும்.

வானத்து நிலவாக,வண்ணமிகு மலராக
பட்டாம் பூச்சிகளாக பள்ளி வரும் பிஞ்சுகளை
கைகொடுத்து வரவேற்று அரவணைக்கும் அதிபர்
ஐயா,வெறுமையாய் நிற்கிறது உமது ஆசனம்
கல்வியின் விளக்கே,கலங்கரை தீபமே
வாழ்க பல்லாண்டு வாழ்த்துகின்றோமே.

**திருமதி. உதயலதா ஆனந்தராஜா**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்தி சங்கம்
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாச நண்பனின் சேவைத்தடங்களில்...



பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக அதிபராக சேவை புரிந்து காரைதீவு கோட்டக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சென்ற திரு ஜெ. டேவிட் அதிபர் அவர்களின் சேவை நலன் பாராட்டுவதற்கு பாடசாலை சமூகம் எடுக்கும் விழாவில் வெளியிடும் மலருக்கு எனது மனப்பதிவுகளை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

டேவிட் அதிபர் அவர்கள் நீண்டகால நெருங்கிய நண்பர் என்ற வகையில் இவரின் குணாதிசயங்கள் பற்றி நன்கறிந்தவன்.இவர் இனநல்லுறவுக்கான பாலம் அமைத்தவர். இவர் எப்போதும் மருதமுனை மக்களோடு மிக நட்பாக கடந்த காலங்களில் இருந்தவர். எப்போதும் எல்லா விடயங்களிலும் நிதான போக்குடையவர். எடுத்த காரியங்களை அற்பண சிந்தையுடன் கருமமாற்றுபவர், எதிலும் நிதானம் தவறமாட்டார். நேர்மை இவரோடு இரண்டறக் கலந்தது.

கல்விப்பணியில் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம் கடந்த காலம் கல்வி அடைவு மட்டத்தில் பின் தங்கிய நிலையில் காணப்பட்ட வேளையில் இவரது வருகைக்கு பின்னர் கல்வி அடைவு மட்டம் எழுச்சி கண்டது. அதுமாத்திரமல்லாது வளவிருத்தி பாடசாலையின் சுற்றாடல் போன்றவற்றில் மிக ஆர்வம் கொண்டு புதிய மீளுருவாக்கம் செய்து கல்முனை வலயப் பாடசாலைகளில் ஒரு போட்டிப் பாடசாலையாக மாற்றினார்.இதனால் சமூகம் மதிக்கத்தக்கதும் வலயம் மதிக்க தக்க அதிபராக மாற்றம் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கோட்டக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி என்றால் இவரே என்கண்முன் தோன்றுவார். காரணம் விவாதம்,இலக்கணம் போட்டிகள்,தமிழ் அறிவு போன்ற போட்டிகள் நடாத்துவதற்கும் ஆலோசனையையும் வழிகாட்டல்களையும் செய்து இப்போட்டிகள் நடாத்தி சிறப்பான வெற்றியாளர்களை தெரிவு செய்து தந்திருக்கிறார். இவரது சிறப்பான தெரிவு மாணவர்கள் அகில இலங்கை போட்டிகளுக்கு சென்று முதலிடம் பெற்றது இவரது சிறப்பான செயற்பாடாகும்.

இவர் தமிழ் மொழியில் சிறப்பு என்பதற்கு சான்றாக தமிழ்மொழியில் முதுமாணிப்பட்டம் வரை சென்று இவரது கல்வித்தகைமைகளை உயர்த்திக் கொண்டார். இளவயதில் வாசிப்பில் அதீத ஈடுபாடு கொண்டதினால் வானொலி நாடகங்கள் மாத்திரமல்ல மேடை நாடகப் பிரதிகள் பலவற்றை எழுதியுள்ளார். நாடகத்துறையில் தேசிய ரீதியாக சாதனை படைத்தவர்.

சிறுகதைகள்,கவிதைகள் என இவருடைய இலக்கிய முயற்சிகள் அளப்பரியது பைந்தமிழ் குமரன் என்ற புனைப் பெயரைக் கொண்ட இவருடைய 24 சிறுகதைகள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கானல் வசந்தங்கள் என்ற நூலை 2017 வெளியிட்டது. மேலும் 50 கவிதைகள் கொண்ட மண்மதா நூலை வெளியிட்டார். மேலும் சிறந்த அதிபருக்குரிய அதியுயர் விருதான குரு பிரதீபா பிரபா விருதை 2014,2015,2016ல் பெற்றவர்.

மேலும் இவரின் கல்விப்பணி தொடர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அல்-ஹாஜ். ஏ.எஸ். சக்காப்**

அதிபர்,

கமு/கமு/ ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொறிக்கல்முனையில் பிறந்து பாண்டிருப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் காரைதீவு கோட்டக் கல்வி பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று பணியாற்றிவரும் திரு. ஜே.டேவிட் அவர்கள் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றிய போதும் அதற்கு முன்னரும் அவருடனான தொடர்புகள் ஆரம்பமாயின என்றே கூற வேண்டும்.

சம்மாந்துறை வலயத்தில் தமிழ்ப் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிய போது அவரது ஆளுமை ஆற்றல்களை பலர் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அவரது தாழ்மை, பொறுமை என்பவற்றை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது. அவர் தமது கல்வித் தகைமைகளையும், தொழிற்றகைமைகளையும் அதிகரித்துக் கொண்ட போதிலும் அவை தொடர்பான மேதாவித் தனத்தை எப்போதும் காட்டிக்கொள்ளவில்லை.

ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய போது பாட ஆசிரியர்கள், சக உத்தியோகத்தர்கள், கல்வி அதிகாரிகளுடனான தொடர்புகள் சிறப்பாயமைந்திருந்ததாக பலர் கூறக் கேட்டிருக்கின்றேன். அப்பதவியில் இருக்கையில் அதிபர் தர பரீட்சையில் சித்தி பெற்று,பின் நாவலர் வித்தியால அதிபராக பதவி வகித்த போது, சக பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக அவரது ஆற்றல்கள்,திறமைகளை பார்த்திருக்கின்றேன். அகில இலங்கை ரீதியில் சிறந்த ஆசிரியர் அதிபர்களை தெரிவு செய்து கௌரவித்து குரு பிரதீபா பிரபா விருது பெற்ற அதிபராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டமை அவரது திறமையைக் காட்டுகின்றது.

தான் கற்ற பாடத்தை,கற்பித்த பாடத்தை மனப்பாடம் செய்பவராக அல்லாமல் தமிழ் இலக்கியத்துறையில் கவிதை,கட்டுரை,சிறுகதை என்று தனது பரிணாமத்தை பைந்தமிழ்க் குமரனாக வெளிக் கொண்டு வந்துள்ளார்.

அன்றைய நாட்களில் கோவில்களிலும்,கலா மன்றங்களிலும் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டது. அதற்காக ஒத்திகை பார்க்கின்ற நாட்கள் எல்லாம் மலையேறி விட்ட காலத்தில்,புதிய பழைய நாடகப் பாதைகளை உள்ளடக்கிய நாடக ஆசிரியராக அவரைக் காண்பது அத்தி பூத்தாற் போல என்று சொல்ல வேண்டி உள்ளது. ஏனெனில் இன்று நாடகங்களை எழுதும் நாடக ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். எழுதுகின்றவர்களும் தங்களுக்குள்ளேயே தங்களை அடக்கிக் கொள்கின்றனர். ஆனால் பைந்தமிழ்க்குமரன் அதனையும் தாண்டி தன்னை வெளிக்காட்டி நிற்கின்றார்.

பாடசாலைகளில் நாடக ஆசிரியராக,மாணவர்களாக,நடிகர்களாக மேற்கொண்ட அவர் மேடையேற்றியவை பல. அந்த வரிசையில் கிறிஸ்த்தவ சமய அமைச்சினால் நடாத்தப்பட்ட நடாகப் போட்டியில் சமூக மற்றும் வரலாற்று நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. அந்நாடகம் கல்முனை திரு இருதய நாதர் ஆலயத்தில் மேடையேற்றப்பட்ட போது அதனை பார்த்து ரசிக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிட்டியமை மகிழ்ச்சிக்குரியதே.

மெதடிஸ்த திருச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் அந்த நாட்களில் கல்முனையில் இருந்து மாணவர்கள் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கச் செல்வார்களாம். அப்போது சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புக்கள் வரை இருந்தது. தற்போதைய கா.பொ.த தரத்திற்குச் சமனானது.தற்போது தரம் 9 வரை மட்டுப்படுத்தப்பட்டு இருந்தாலும் மாணவர்கள் பாடவிதான,இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் சிறந்து விளங்குகின்றார்கள்.

பலவேறான அதிபர்கள்,ஆசிரியர்களின் அர்பணிப்பான சேவையின் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் அதிபர் ஜே.டேவிட் அவர்கள் தனது ஆற்றல்களையும்,திறமைகளையும் உட்புகுத்தி சக ஆசிரியர்கள் பெற்றோர் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் பாடசாலையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றிருக்கிறார்.

ஆசிரியர்,ஆசிரிய ஆலோசகர்,அதிபர்,கல்விப் பணிப்பாளர் என்ற பதவி உயர்வுகளை பெற்றுக் கொண்ட திரு.ஜே.டேவிட் அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் பாராட்டு மலர் ஒன்றை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதே இதனை மேற்கொள்கின்ற ஆசிரியர்கள் உட்பட்ட பாடசாலை சமூகத்திற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

**வடிவேல் பிரபாகரன்**
ஓய்வுநிலை அதிபர்,
உவெஸ்லி உயர்தரப் பாடசாலை,
கல்முனை.

**கல்வியின் வேர்கள் கசப்பானவை. ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை.**

- திரு. வி.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால்...

பாண்டிருப்பில் பழமையானதும் முதல் பாடசாலையானதும் ஊரில் பல ஆளுமைகளை உருவாக்கிய பெருமைக்குரிய நாவலர் வித்தியாலயத்தினை சிறப்பாக நிருவகித்த பல சிறந்த அதிபர்களுள் ஒருவராக பல ஆண்டுகள் தன்னலம் கருதாது சேவையாற்றிய திரு.ஜே.டேவிட் அதிபர் அவர்கள் தனது அதிபர் கடமையில் மாத்திரமின்றி தமிழ் மீது கொண்ட தீராத ஆர்வத்தினால் பல காத்திரமான படைப்புக்களையும் உருவாக்கியதோடு நல்ல நாடக நடிகராகவும் நாடகங்களை எழுதி அதை நெறியாக்கம் செய்து தயாரித்து மேடையேற்றிய பெருமைக்குரியவராகவும் சிறந்த வாசிப்பாளராகவும் விமர்சன ரீதியில் இலக்கிய ஆய்வாளராகவும் நல்ல கவிஞராகவும் சிறுகதை எழுத்தாளராகவும் என பல்வேறு ஆளுமைகளை கொண்ட இவர் தனது சேவைக் காலத்தில் ஆசிரியராக,ஆசிரிய ஆலோசகராக,அதிபராக என கல்விப் புலத்தில் பல்வேறு படிகளை கடந்து தற்போது கோட்டக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து உள்ளத்துடன் தனத அனுபத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி மென்மேலும் பல உயர் பதவிகளை பெற்று எமது தமிழ் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல சேவைகளை வழங்க இறைவன் நல்லருளையும் தேக ஆரோக்கியத்தையும் மன அமைதியையும் மகிழ்ச்சியையும் வழங்க வேண்டும் என பிராத்திப்பதுடன் வாழ்த்துக்களையும் கூறி எனக்கும் இச் சந்தர்ப்பத்தை வழங்கிய பாடசாலை அதிபருக்கும் ஏற்பாட்டு குழுவினருக்கும் எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.

நன்றி.

**எஸ். புனிதன்**

அதிபர்,

கமு/கமு/ பாண்டிருப்பு மகா வித்தியாலயம்,

பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை ஆசிரியர் குழாத்துடன் அதிபர் ஜெ. டேவிட் அவர்கள்



## பாடசாலை நிகழ்வின் நிழல்கள்






ஜெ. டேவிட் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவுச் சுவடுகளில்...

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் புகழ் விழங்கும் ஊரான சொறிக்கல்முனையில் அவதரித்த ஒரு கலைஞன் டேவிட் சேர் அவர்கள். இவர் கலைப்பட்டதாரியாகவும் பின் முதுமானிப்பட்டம் மற்றும் நாடகம்,இலக்கியம்,சிறுகதை போன்றவற்றில் பெருமை பெற்று பைந்தமிழ்க் குமரன் என்ற புனை பெயரைக் கொண்டு இருந்தார். பாண்டிருப்பில் திருமணம் முடித்து இரண்டு குழந்தை செல்வங்களைப் பெற்று பாண்டிருப்பிலே நாவலர் வித்தியாலத்தில் அதிபராக சுமார் எட்டு வருடங்களுக்கு மேலாக சேவைகள் செய்து தற்போது பதவி உயர்வு பெற்று கோட்டக் கல்விப் பணிப்பாளராக விபுலானந்தர் பிறந்த ஊரான காரைதீவில் சேவையாற்றி வருகிறார். இவர் ஆரம்பத்தில் ஆசிரியராகவும் பின் ஆசிரிய ஆலோசகராகவும் பின் அதிபராகவும் அதன் பின்பு கோட்டக்கல்வி பணிப்பாளராகவும் கல்வியில் உயர்ந்து கொண்டே செல்கின்றார். அந்த வகையில் இவர் மென்மேலும் கல்விப் பணியிலும்,சமூகப் பணியிலும் வளர இறைவன் அவருக்கு அருள் புரிவார்.

இவர் அதிபராக இருக்கும் காலத்தில் நான் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தேன். அந்த வேளை என்னை வரவேற்று பிரதி அதிபர் பதவியை வழங்கிய ஒரு சிறந்த அதிபராகும். என்னை அலுவலக பணிகளில் ஒத்துழைக்குமாறு கூறினார். அப் பணியை ஏற்று நான் அவருடன் இரண்டு வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி இருக்கின்றேன். அந்தக் காலப்பகுதியில் அவருடன் பழகிய நாட்களை நினைக்கும் போது என் மனம் சில வற்றை கூறச் சொல்கிறது. ஒரு சிறந்த அதிபர் மட்டுமல்ல தலைமைத்துவ பண்பும் அனைவரையும் கட்டியாழும் தன்மையும் சேவை மனப்பாங்கும் கொண்ட இவர் மாணவர்களுக்கு தனது கல்வியை எப்படியாவது வழங்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நோக்கில் வகுப்பறைகளுக்குச் சென்று தமிழ்ப் பாடத்தை கற்பிப்பார். சிறந்த பேச்சாற்றல் கொண்ட இவர் எச்சமயம் பாராது வாணி விழாக்காலங்களிலும் ஏடு தொடங்குவார். பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்துக் கொண்டே இருப்பார். மாணவர்கள் மத்தியில் கண்டிப்பும் கரிசனையும் இருக்கும் அதே வேளை ஆசிரியர்களை நெறிப்படுத்தி வழி நடத்துவார். வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து வரும் அழைப்புக்களுக்கு உடனே பதிலை கொடுப்பார். இவரது காலங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஓங்கிக் காணப்பட்டது. இவரது நெறிப்படுத்தலினால் மாணவர்கள் வலயம்,மாவட்டம்,மாகாண,தேசிய மட்டங்களிலும் விருதுகளும் சாதனைகளும் பெற்றிருந்தனர் அந்தவகையில் டேவிட் சேர் அவர்கள் எங்கு சென்றாலும் அவரது பணிகள் மேலும் மேலும் தொடர பாடசாலை சமூகம் சார்பில் வாழ்த்துக்களை பூக்களாக சொரிகின்றோம்.



**ம. மனோகர்**
பிரதி அதிபர்,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.

**உன்னிடம் பாசம் வைக்கும் இதயத்தை நேசி**
**உன்னைக் கோபப்படுத்தும் இதயத்தை**
**அதிகமாக நேசி.**

- அன்னை தெரேஸா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நானும் பைந்தமிழ்க் குமரனும்

நானும் பைந்தமிழ்க் குமரனும் நீண்ட நாட்கள் அறிமுகமானவர்களானாலும் 1993-1994 காலப்பகுதியில் கல்முனை இராமகிருஷ்ண மிசன் மகாவித்தியாலயத்தில் ஆசிரிய நண்பர்களாக இணைந்து கொண்டோம். இயற்கையாகவே தமிழ் இலக்கியத்தின் பால் ஈர்க்கப் பட்டவர்களான நாங்கள் இளமைத்துடிப்போடு பாடசாலை சூழலை பயன்படுத்தி பல பாரம்பரிய கலை இலக்கிய வடிவங்களுக்கு புத்துயிர் அளித்தோம் என எண்ணும் போது பைந்தமிழ் குமரன் தொடர்பான பல நினைவுகளும் வந்து போகின்றன.

மாணவர்களுக்கான கற்பித்தலோடு இணைப்பாட விதான அபிவிருத்தியிலும் அதிக பங்களிப்பினை வழங்கினோம். இலக்கியம் சார் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் டேவிட் அதிக பங்களிப்பை வழங்குவார். பல்வேறு சமூக புராண நாடகங்களை அக்காலத்தில் இவரின் தலைமையில் மேடையேற்றினோம். நாடகம் எழுதுவது என்பது அவருக்கு ஒரு கலையாகவே இருந்தது. அத்துடன் வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, விவாத மேடை,கவிதைத் தொகுப்பு, கொம்பு முறி, கும்மி என எங்கள் இலக்கியப்பணி நீண்டு சென்றது. இவற்றுக்காக அதிகம் உழைத்தவர் பைந்தமிழ் குமரன் ஆவார்.

இரவு பகல் பாராது இந்நிகழ்வுகளை முன்னெடுப்பதில் எங்களுக்கு ஓர் இலக்கிய கூட்டு செயற்பட்டது. மாணவர்களைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வெற்றிகளையும் சம்பாதித்தோம். இவற்றை இப்போது நினைத்தாலும் மன மகிழ்வைத் தரும்.

ஒரு டயறியை நெஞ்சோடு அணைத்தபடி ஒருகையை சற்று உயர்த்திப் பிடித்தப்படி சற்று வேகத்துடன் நடந்து வருகின்றார் என்றால் நான் தூரத்தில் இருந்தே கூறிவிடுவேன் பைந்தமிழ் குமரன் ஏதோ காரியத்தில் இரங்கிவிட்டார் என்று அருகில் வந்ததும் அதைத்தான் அவர் கூறுவார் சபா நாம் ஒரு நாடகம் பழக்குவோம், வில்லுப்பாட்டு பழக்குவோம், விவாதம் ஒன்றைச் செய்வோம் அதற்கான குறிப்பு இதோ படித்துப்பாருங்கள் வேறு ஏதாவது சேர்க்க வேண்டுமா என்பார். நாங்களும் அவரின் ஆர்வம் குறையாமல் அக்கணமே செயற்படுவோம் இவ்வாறு பல இலக்கிய வடிவங்களை படைத்திருக்கின்றோம் என்பதை நினைத்து மகிழ்ந்திருக்கின்றேன்.

அத்துடன் பைந்தமிழ் குமரனுக்கு இசையிலும் நாட்டமிருந்தது என்ன விழா நடந்தாலும் இவரின் ஓகன் இருக்க தவறுவதில்லை. அதனால் அக்காலத்தில் இவருக்கு ஓகன் டேவிட் என்ற பட்டப்பெயரையும் கொண்டு அழைத்து மகிழ்ந்திருக்கின்றோம். நான் டேவிட், தயானந்தம், ரகுவிசு, ரகுபதி, முரளி, அமரர் சபேசன் என ஒரு இலக்கிய ரசிக பட்டாளமே அன்றைய இராமகிருஷ்ணன் மிசன் மகா வித்தியாலயத்தில் இருந்தோம்.

2001 ஆம் ஆண்டு தொண்டன் பத்திரிகையில் கல்முனை வெளயீட்டின் மூலம் நானும் அவரும் மீண்டும் இலக்கிய நண்பர்களாக இணைந்தோம் அப்பத்திரிகையில் எமது பிரதேசத்தில் மறைந்திருந்த விசுவாசம் குருகுதம்பி என்ற மூத்த கலைஞனின் இலக்கிய ஆளுமையை நேர்காணல் மூலமாக பைந்தமிழ் குமரன் வெளிக் கொண்டுவந்தார். அப்பத்திரிகையில் நானும் ஒரு கட்டுரையை எழுதினேன் பலரின் பாராட்டும் கிடைத்தது.

மற்றவர்களின் இலக்கிய ஆளுமையை வெளிக் கொண்டு வருவதிலும் பாராட்டுவதிலும் மிகுந்த விருப்பம் கொண்டவராகவும் மனப்பாங்கு உள்ளவராகவும் பைந்தமிழ் குமரன் டேவிட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தேன். அதே பத்திரிகையில் கல்முனையின் இலக்கிய ஆளுமைகள் மையமாக கொண்டு ஒரு கட்டுரையும் அவரால் எழுதப்பட்டது. அதில் அதிபர் மத்திய. உமாவரதராஜன் என பல இலக்கிய ஆளுமைகளின் வெளியீடுகளை உள்ளடக்கி இருந்தார்.

இதன் பின் பின்னைய நாட்களில் அவரால் எழுதி கலையிலக்கிய நண்பர்கள் வெளியீடு செய்த சிறுகதை தொகுதி கவிதைத் தொகுதிகள் புத்தகமாக வந்த போது அவருடன் பழகிய காலத்து மன ஆளங்களை மீண்டுமாக சுவைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 2016-2019 காலங்களில் மீண்டுமாக எங்கள் இலக்கிய சந்திப்புக்கள் இடம் பெற்றதோடு பல விவாத மேடைகளில் கலந்து கொண்டு சமூகத்திற்கு தேவையான ஆக்கபூர்வமான கருத்துக்களை எங்களி னால் முன்வைக்க முடிந்தது. இதன் மூலம் சிறுகதை,கவிதை,நாவல் மூலம் சமூகத்திற்கு கொண்டு செல்வதை விட அதிக கருத்துக்களை வேகமாக மக்களிடத்தில் எடுத்து சொல்ல முடிந்தது.

இவ்வாறு பைந்தமிழ் குமரன் டேவிட் பல்வேறு இலக்கிய வடிவங்களை படைத்த படைப்பாளியாக ஆசிரியராக,அதிபராக பல பணிகள் ஆற்றிய காலம் தொடக்கம் அவருடன் பயணித்து இன்று அவர் கோட்டக்கல்விப்பணிப்பாளராக உயர்வு அடைந்ததை யும் வாழ்த்துகின்றேன்.

**சஞ்சீவி சபாரெட்ணம்**

அதிபர்,

கமு/கமு/ சிவசக்தி மகா வித்தியாலயம்,

நற்பிட்டிமுனை.

முடியும் என்போர்க்கு எதுவும் முடியும்.

- வெர்ஜில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளிலிருந்து

டேவிட் சேர்

தாங்கள் பயணிக்கும் பாதைகள்
பலவிதமாகலாம் - அது
சிலருக்கு நேரானதாகலாம்
பலருக்கு கரடுமுரடானதாகலாம்

உறவுகளுக்குள் ஊடாடும் போது - அது
கடமையாக மாறலாம்
கடமையை நெஞ்சில்
சுமக்கும் போது - அது
சுகமான ராகங்களாக மாறாலாம்

முத்தமிழின் நாடகத்தினை
நயம் கொள்ளும் போது
நல்ல நடிகனாக மாறலாம்
நறுக்காக தமிழை உரைக்கும் போது
நல்லதொரு நாவன்மையாளனாகலாம்

இலக்கியப் படைப்புக்களை
இயக்கும் போது ஒரு இயக்குனராகலாம்
பன்முகப் படைப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கும் போது நல்லதொரு
படைப்பாளனாகலாம் - அதனால்
பட்டங்களும் பதவிகளும் கூடிவரலாம்

ஆண்டவனின் ஆசிர்வாதத்தால் நாம்
ஆன் மீகத்தில் நயம் கொள்ளும் போது
ஆத்ம திருப்தியடையலாம்
டேவிற் சேர்
நிஜமான என் நினைவுகளிலிருந்து
இத்தனைக்கும் சொந்தக்காரனான
உங்கள் பணி மென்மேலும்
தொடரட்டும் தொடரட்டும்

திருமதி. நிலக்ஷினி மரியரெட்ணம்
ஆசிரியை, கமு/கமு/ கமுநாவலர் வித்தியாலயம்.



**திருமதி. நிலக்ஷினி மரியரெட்ணம்**
ஆசிரியை,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.

**சும்மா இருக்கும் போது கடிகாரத்தைப் பார்**
**ஓடுவது முள்ளில்லை! அது உன் வாழக்கை.**
- ஷோக்கிரட்டீஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் ஒரு நடிகர்

இடது புறம் ஊசிவலி, சுவாசம் உரத்து, சிரமமாகி, உடல் வியர்த்து, நடக்க முடியாமல் இப்படி எத்தனையோ வலிகள். வேறு வழியின்றி மருத்துவ பரிசோதனைகள் - பதில் அடைப்புக்கள் அதுவும் இத்தனை விதமாக இனியும் கிட்டங்கி தாண்டி ஓட முடியாது. கல்முனைக்குள் செல்ல வேண்டும் பல வருடங்களாக இடமாற்ற விண்ணப்பங்களை நிரப்பி கொடுத்தது தான் மிச்சம் எந்த குப்பை கூடைகளை நிரப்பினதோ பதினேழு வருடங்களின் பின்பு கல்முனை வலயத்திற்குரிய இடமாற்றம் கிடைத்தபோது என்னை விட எனது மனைவியும் பிள்ளைகளும் மகிழ்ந்தார்கள். இப்போ பாடசாலையை தேடும் படலம் தொடங்கியது. நான் விரும்பிக்கேட்ட பாடசாலை களை அலுவலகம் தர மறுத்து விட்டது. நாவலர் பாடசாலை முன்மொழியப்பட்ட போது மீண்டும் வலி பரவியது. அதிபர் டேவிட் இருக்கிறார் மிகவும் கண்டிப்பானவர் லீவுகள் எடுப்பதோ சலுகைகள் எதிர்பார்ப்பதோ முடியாதது வேலை வாங்குவார் அதிகம் கதைக்க மாட்டார். இப்படியே பலர் சொல்லி இருந்தார்கள். வேறு வழியில்லை வருவது வரட்டும் என்று கடிதத்தை எடுத்து கொண்டு வருகின்றேன். அவர்கள் கூறியவை உண்மை போலவே தெரிகின்றன.

நாட்கள் நகர்கின்றன யாவுமே பொய்யாகிப் போக ஒரு அன்பான மனம் படைத்த அதிபரை கண்டேன். பரிவு,பாசம்,இரக்கம்,கருணை அத்தனையையும் மொத்தமாக கொண்டவர் எங்கள் அதிபர் டேவிட். ஆனால் ஒரு சிறந்த நடிகன். இவை அத்தனையையும் மறைத்து விட்டு முகத்தை மாற்றிக்கொண்டு ஒரு தடவை வந்தாரென்றால் பாடசாலை நிசப்தமாகி விடும். ஆசிரியைகள் ஓடிப்போய் வகுப்பறைகளில் பாடத்தை தொடங்கி விடுவார்கள். குடும்ப உறவுகளை குசலம் விசாரிப்பது,நிகழ்வுகள்,வைபவங்களில் கலந்து கொள்வது அவரது இயல்பான குணம். மிகவும் குழப்படிகள் செய்த மாணவர்களை தண்டித்து பின் தனியே இருந்து கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்குவதும், ஆசிரியர்களுக்கு கண்டிப்பாகப் பேசிவிட்டு வருத்தப் படுவதும் தனக்குள்ளே உடைந்து போவதும் அவரது பண்பு. தனது மனைவி அறியாவண்ணம் வேதனத்தில் ஒரு பகுதியை இப் பாடசாலை மாணவர்களுக்காக செலவிட்டார் என்பதை நானும் ஒரு சில ஆசிரியர்களும் அறிவோம். இடது கை செய்வதை வலது கை அறியாவண்ணம் வாழ்ந்த, வாழுகின்ற ஒரு பெருமகன்.

இந்தப் பாடசாலையில் தன் சொந்த வாழ்வின் சுமைகளை பகிர்ந்து கொள்ளும் ஒருவனாக நான் மட்டுமே இருந்தேன். எனது வீட்டு அப்பம் மனோகரன் ஆசிரியரின் அவியலும் சம்பலும் அவருக்கு மிகவும் பிடிக்கும். ஆண்கள் ஒன்றாக பேசியபடியே தேனீர் பருகும் நிமிடங்கள் மறக்க முடியவில்லை. நல்ல வாசகன்,சிறந்த பேச்சாளர்,சிந்தனையாளர்,கலைஞர்,எழுத்தாளர் மேலாக சிறந்த நிருவாகி என பல ஆளுமைகள் கொண்ட எங்களது அதிபர் டேவிட் சேர் அவர்கள் காரைதீவு கோட்டத்தின் காவலனாக கலங்கரை தீபமாக மிளிர்வார் என்பதில் ஐயமில்லை சுவாமி விபுலானந்தரை தந்த அந்தப் புண்ணிய பூமி இப்பெருமகனை கல்விக் காவலனாக பெற்று புகழடைகின்றது என்பது உண்மை. எனது உடன் பிறவா சகோதரர் ஆளுமை மிக்க அதிபர் எங்கு சென்றாலும் பல்லாண்டுகள் வாழ புகழுடன் சிறந்தோங்க வாழ்த்து கின்றேன்.




**அ. திவாகரன்**

விஞ்ஞான பாட ஆசிரியர்,

கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,

பாண்டிருப்பு.


**படியுங்கள், சிந்தியுங்கள், நெஞ்சில் நிறுத்துங்கள், உயருங்கள்.**

- எமர்ஷன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கரைக்க முடியாத கருங்கல்



எமது பாடசலை எனும் நந்தவனத்தில் முதன்மைப் பூ எங்கள் அதிபர் திரு. ஜெயக்கொடி டேவிட் ஐயா அவர்கள். அவர்களுடன் சேவையாற்றிய எனது சேவைக் காலங்கள் காலத்தால் அழியா தவை.

ஒரு தாய்ப்பறவை தனது குஞ்சுகளை பாதுகாப்பதை போல எமது பாடசாலையையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் காருண்யத்துடனும் சிறு கண்டிப்புடனும் தாயன்புடன் காத்துவந்த தாய்மை உள்ளம் கொண்ட சிறந்த மனிதர். தலைமைப் பதவியில் இருக்கின்றோம் என கர்வம் கொள்ளாது ஒரு குடும்பத்தின் தலைவனாக திறம்பட சேவையாற்றியவர். என்னைப் பொறுத்தவரை ஒரு தகப்பன் ஸ்தானத்தில் அன்றும்,இன்றும்,என்றும் நினைவில் நிறைந்திருப்பவர். எத்தனை! எத்தனை! வெற்றி வாகைகள் சூடினாலும்,அத்தனையையும் தன்னுள் அடக்கி தன்னடக்கமாக வாழும் மாமனிதர். தற்போது அவர் எமது பாடசாலையை விட்டுப் பதவி உயர்வு பெற்று செல்வது ஒரு குடும்பத்தின் தந்தை வெளிநாட்டிற்குச் சென்ற நிலையில் அக் குடும்பம் எதிர்நோக்கும் சவால்களைப் போன்றது,எமக்கும் பாடசாலைக்கும். அவர் எங்கிருந்தாலும் உடல் அங்கும் அவரின் நினைவுகள் எம்மையும் பாடசாலையையும் நோக்கியதாய்க் காணப்படும் என்றால் அது மிகையாகாது,நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகளை என்றும் நான் மறவேன்.



**திருமதி. சுதர்சினி உருத்திரராஜா**
ஆசிரியை,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மை ஆசானுக்கு முத்துக்களாக சில வரிகள்

கமு/கமு/ நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி, காரைதீவுக் கோட்டத்திற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற திரு.ஜே.டேவிட் சேர் அவர்களின் சேவை நலன் பாராட்டி வெளிவரும் மலருக்கு எனது உள வெளிப்பாடுகளை வார்த்தைகளாக வரைவதில் அகமகிழ்கின்றேன்.

கடந்த 1993-1995 காலப்பகுதியில் நான் க.பொ.த (உ.த) பிரிவில் கல்வி கற்கும் போது சிறந்த ஆசானாகவிருந்து என்னை வழிப்படுத்தினார். இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிக ஈடுபாடு காட்டினார். மிகக் குறுகிய காலத்தில் பாவம் தந்த பரிசு என்ற நாடகத்தை பயிற்றுவித்து தமிழ்த் தினப் போட்டியில் வெற்றி பெற செய்தார். எனது மாணவப் பருவத்தில் மட்டுமல்ல ஆசிரியை யாக கடமையாற்றிய காலத்திலும் இவரது ஆலோசனைகள் உறுதுணையாக அமைந்தன.

நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட இவர் முகத்தில் சிறிய புன்முறுவலுடன் காட்சியளிப்பார் தான் கற்ற கல்வி ஏனைய வர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற பரந்த நோக்குடையவர். நேர்ச் சிந்தனை கொண்டவர். உலக நடையறிந்து ஒப்புர ஒழுகுபவர் இறைவன் மீது அதிக பக்தி கொண்ட இவர் வைபிள் வரிகளுக்கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இவரது குணங்களை அகர வரிசைப்படி கூறினால்,

அ - அன்பு, அறிவு, அடக்கம் உடையவர்

ஆ - ஆதரவளிப்பவர்

இ - இரக்கம் உடையவர், இன்முகம் காட்டுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ - ஈகைத்திறனுடையவர்

உ - உற்சாகமானவர்

ஊ - ஊக்கமுடையவர்

எ - என்றென்றும் இளமைத் துடிப்புடன் செயற்படுபவர்

ஏ - ஏணி போன்று செயற்படுபவர்

ஐ - ஐயம் இன்றிப் பழகுபவர்

ஒ - ஒழுக்கம் உடையவர்

ஓ - ஓசை நயம் கொண்டவர்,ஓய்வற்று இயங்குபவர்

ஔ - ஔடதமானவர்

விளைதிறனும்,வினைத்திறனும் மிக்க பயிற்றப்பட்ட ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, பகுதி நேர விரிவுரையாளராக சேவையாற்றிய சாதனையாளர் பலரை உருவாக்கிய உன்னத சிற்பியாவார். தற்போது கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று கல்விப்புலத்தில் மென்மேலும் சேவைகள் பல புரிய களமிறங்கியுள்ளார்.

**தோன்றிற் புகளொடு தோன்றுக - அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று**

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைவாக வாழ்கின்ற இவர். ஆல் போல் தழைத்து,அறுகு போல் வேரூன்றி,மூங்கில் போல் சுற்றத்தாரோடு சிறப்புடன் வாழ்கவென மனமுவந்து வாழ்த்துகின்றேன்.


வாழ்த்துவது,

**திருமதி. கோசலா யோகராசா**
வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அகத்திலிருந்து சில துளிகள்.....



கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி தற்போது கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் எங்கள் மதிப்பிற்குரிய அதிபர் திரு.ஜே.டேவிட் சேர் அவர்களை பாராட்டி வெளியிடும் இம் மலரில் எனது இச் சிறு பதிவினைப் பதிவதில் பெருமகிழ்வடைகிறேன்.

பார்போற்ற வாழும் பாக்கியம் மானிடராய்ப் பிறந்த எவருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. அத்தகைய பாக்கியம் பெற்றவர் நீங்கள் என்பதில் ஐயமில்லை. கலைமானி,முதுமாணி எனப்பல கலைப்பட்டங்கள் பெற்றவர் நீங்கள். வானொலி நாடகங்களில் தொடங்கி மேடை நாடகப்பிரதிகள் எழுதி நெறியாள்கை செய்து நாடகத்துறையில் தேசிய சாதனைகள் பலபுரிந்து அதியுயர் விருதான குருபிரதீபாபிரபா விருது பெற்று பேச்சாற்றலால் பலரையும் கவர்ந்து சொல்லின் செல்வனாய்த் திகழ்ந்து சிறுகதைகள், கவிதைகள் எனப் பலநூல்களை எழுதி பைந்தமிழ் குமரனாய் புனைபெயர் பெற்று கானல் வசந்தங்களின் கதாநாயகனாகி கலைத்துறைப் பங்களிப்பிற்காக பொற்கிளி பெற்ற சமூகத்தில் ஒரு நல்ல ஆசிரியராக.ஆலோசகராக மாண்புமிகு அதிபராக பகுதி நேர விரிவுரையாளராகப் பல பரிமாணங்களாகக் கடந்த சிறந்த மாமனிதர் நீங்கள் உங்கள் மேன்மை பற்றி இன்னும் சில வரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாய் கொண்ட மை வாய்மை
உங்கள் தாய் கொண்ட மை பெருமை
உங்கள் மனம் கொண்ட மை பெருமை
உங்கள் குணம் கொண்ட மை பெருமை
உங்கள் மூளை கொண்ட மை கூர்மை
உங்கள் வேலை கொண்ட மை நேர்மை
நீங்கள் சகஆசிரியர்களுடன் கொண்ட மை தோழமை
நீங்கள் செயலுக்குப் பூசிய மை திறமை
உங்கள் மெய்க்குப் பூசிய மை உண்மை
உங்கள் கைக்குப் பூசிய மை தூய்மை
கண்ணாடி அணிந்த கென்னடி நீங்கள்
கல்வித்துறைக்குச் சிறந்த முன்னோடி நீங்கள்
உம்முள் இத்தனை மேன்மை கண்டு சிலிர்க்கின்றது எம் மெய்
உழைப்பால் உயர்வு பெற்ற சிகரமே
உமக்காய் குனிகின்றது எங்கள் சிரமே.




**திருமதி. சீரோரெத்தினம் பாக்கியராசா**
ஆசிரியை,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.


**அதிகமாக பேசாதவரை உலகம் விரும்புகிறது.**
**அளந்து பேசுபவரை அதிகம் மதிக்கிறது.**
**அதிகம் செயற்படுபவரை கையெடுத்துத் தொழுகிறது.**
- கன்பூசியஸ்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க... வாழ்க...



என்னுடன் பழகிய நண்பர்களுள்
பெயர் குறிப்பிடக்கூடியவர்களில்
திரு.ஜே.டேவிட் சேர் அவர்களும் ஒருவர்.
அவர் அன்பும் பண்பும் மிக்கவர்
மற்றவர்களுக்கு
முன் உதாரணமாக செயற்படுபவர்.
எந்தவொரு விடயத்தையும்
நன்கு அலசி ஆராய்ந்து முடிவெடுக்கும்
சிறந்த திட்டமிடலாளர்.
நேர முகாமைத்துவத்தை
சிறப்பாக கடைப்பிடிப்பவர்.

இவ்வாறு பல
நற்குணங்களையுடைய
நண்பன் டேவிட்
தனது அரச பணியில்
ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, வளவளராக,
பகுதி நேர விரைவுரையாளராக, அதிபராக
கல்விப்பணியில் பயணித்த இவர்
கோட்டக்கல்விப் பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்று சேவையாற்றுவது
இறைவன் அவருக்கு வழங்கிய
வெகுமதி என்றே கூற வேண்டும்.
உங்கள் எதிர்காலம் மென்மேலும்
உயர்வடைய வாழ்த்துகின்றேன்.
வாழ்க வளர்க.

**வி. யோகராசா**
அதிபர்
கமு/கமு/ விவேகானந்தா தமிழ் வித்தியாலயம்,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப் பூக்கள்

எனக்கு சொந்தமான சில வரிகள்
இங்கே உங்களுக்காக
பல இன்னல்கள் பல சிக்கல்கள்
வந்த போதிலும் துணிவுடன் எதிர் கொண்டு
நாவலர் வித்தியாலயத்திற்கு கடமைகள்
பல புரிந்துள்ளீர்கள் பாராட்டுகின்றேன்

என் அறிவை வளர்த்திட
என் திறமையை பெருக்கிட இலை மறை
காய் போல இருந்த என்னை பாடசாலைக்கு
பெருமை பெறுவதற்கு எனக்காக சுயகௌரவத்தை
நான் பெற்றிட வழி வகுத்த உங்களை
நான் பாராட்டுகின்றேன்

சிறந்த ஆளுமை கடமை
கண்ணியம் கல்வி மாணவர்களின் ஒழுக்கத்தில்
கண்டிப்பு என்பவற்றை பாராட்டுகின்றேன்

நாவலர் வித்தியாலயத்தில்
கடமை ஏற்ற பின் தமிழ் தின போட்டியில்
மாணவர்களை மாகாண மட்டத்திலும்
மாவட்ட மட்டத்திலும் விளையாட்டுப்
போட்டியில் சிறந்த வீராங்கனைகளையும் ஐந்தாம்
தரப் புலமைப் பரீட்சைகளிலும் உரிய
ஆசிரியர்களையும் மாணவர்களையும்
தரம் உயர்த்துள்ளீர்கள் என்பதை பாராட்டுகின்றேன்.



**திருமதி. சரஸ்வதி ரவீந்திரன்**
ஆசிரியை,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுகள் பெற்ற கோமகனே...

பிறப்பிடமான சொறிக்கல்முனையில்
ஜெயக்கொடி பெற்ற டேவிற் சேர் - மண
வாழிடமான பாண்டிருப்பில் - மாணிக்கப்
பிள்ளையார் கோயில் முன் பதிவிரதையாம்
கிருஷ்ணகுமாரியைக் கரம் பிடித்து வாழ்கின்றீரே

தமிழ் போற்றும் நாவலர் வித்தியாலயத்தில் - உமது
தடம் போற்ற வைத்த டேவிற் சேர்
இசையில் மயங்காதவர் யாருமில்லை என்பதற்கேற்ப
இசைக்கல்வியை கற்பிக்க இடமளித்தீர்

தமிழ்மொழித்தின தனியிசையில் மாணவர் வென்றிட
பயிற்றுவிக்க என்னை ஊக்குவித்த டேவிற் சேர்
தமிழ்மொழியில் முதுமாணிப் பட்டம் பெற்ற
புனைப்பெயராளன் பைந்தமிழ் குமரனே

பட்டங்கள்,விருதுகள் பல பெற்ற அதிபரே - நீர்
சிறுகதைகள்,விவாதங்கள் புரிந்து பல விரிவுரைகளை நடத்தி
கட்டங்களாக உனது சேவையை விதந்து கூறி
சிறுமையாக எழுத இடமளித்தீரே

மாணவர் ஆசிரியர் பால் கண்டிப்புக் கொண்டும்
மனதுடன் கல்வி  கற்க வழியமைத்த டேவிற் சேர்
என்றும் உமது புகழ் ஓங்க - நல்
வாழ்த்துக் கூறும் ஆசிரியை



**திருமதி. பிரதீபராணி ஜெயக்கிருஷ்ணான்**
ஆசிரியை,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் சிகரமே...



கல்விப் பெருந்தகையே...

மாசற்ற வைடூரியமே...

அன்பான

மனிதர் குல மாணிக்கமே...

அர்ப்பணிப்பாய் பணியாற்றி

அறம்காத்த ஆசானே...

ரம்மியமான கற்பித்தலால்

பிசகாத மாணவத்துவத்தை

அருமையாக உருவாக்கி

கலைகள் பல பயிற்றுவித்து

மணி முடியாகத்திகழும் பாங்கான பைந்தமிழ் ஆசானே...

ஆசிரியராய் அறிமுகமாகி,ஆசிரிய ஆலோசகராய்

அதிபராய்,பகுதிநேர விரவுரையாளராய்,கவிஞராய்,

நாடகத்துறையில் கலைஞராய்,தற்போது கோட்டக்கல்விப்

பணிப்பாளராய்

பல பரிமாணங்கள் பெற்றவரே...

கடமையில் சிறப்பாய்,குணத்தினில் குழந்தையின் சிரிப்பாய்

எமது கல்விச் சாலையில் தலைமை ஆசானாய் பணியாற்றிய

கடமையின் சிகரமே...



ஜெ. டேவிட் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கல்வித்துறைக்குக் கிடைத்த வரமே...
அறிவுச்சிறகால் எம் கல்வி வானில் பறந்த
பகுத்தறிவுப் பறவையே...
உம் புகழை என்றும் மறவோமே...
எத்தனை மாலைகள், எத்தனை பட்டங்கள், பதவிகள்,
பதக்கங்கள், கௌரவிப்புக்கள் பெற்றாலும்
அத்தனையும் தன்னுள் அடக்கி தன்னடக்கமாய் திகழ்பவரே...
அழகான பாத்திரமே அன்பின் சூத்திரமே...
தூய நல் பண்பினை உம்மில் கண்டோமே...
திகட்டாத அன்பினை உன் பால் கொண்டோமே...
ஐயா!,பேரன்பும் பெரும் மதிப்பும் செம்மையாய்ச் செழித்து
பேரண்டம் அதன் மேலே சிறப்பாய் கொழித்து
வாழ்வாங்கு வாழவே எம் சிரம்தாழ்த்தி வாழ்த்தும்,




**திருமதி. ஹரிப்பிரியா நிலக்சன்**
ஆசிரியை,
கமு/கமு/ நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு.


**முடங்கிக் கிடந்தால்
சிலந்தியும் உன்னைச் சிறைப்பிடிக்கும்.
எழுந்து நின்றால்
எரிமலையும் உனக்கு வழி விடும்.**

- கவிதாஸ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையை
ஓய்வு ஒழிச்சலின்றி,
இரவு பகல் பாராது வழிநடாத்திய
எம் பெருந்தகையின் வாழ்வு சிறக்கவும்
உடல், உள நலங்களுடன்
நீண்டநாள் வாழ்வாங்கு வாழவும்
வாழ்த்துகின்றோம்.
நாவலர் வித்தியாலயம்
ஒளிரும் காலமெல்லாம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட் சேரின்
பெயரும் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.
வாழ்த்துகின்றோம்.
போற்றுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்
நாவலர் வித்தியாலயம்,
பாண்டிருப்பு,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Design & Print : Jesa Grafix, Main Street, Maruthamunai. Tel : 0756569393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org